சாரப் பிரதிநிதித்துவப்படி, ஒற்றை மாற்று வாக்கு மூலம் நடைபெறும் இத் தேர்தலுக்குக் கீழ்க்கண்ட நாட்கள், நேரடி வாக்குப் பதிவு முறை மூலம் நடைபெறும் நாட்களென முடிவு செய்யப்பட்டுள்ளது—

வேட்பு மனுக்கள் பெற்றுக் கொள்வதற்கான கடைசி நாளும் நேரமும்	9—3—84 நண்பகல் 12 மணி
வேட்பு மனுக்கள் பரிசீலனை செய்தல்	9—3—84 பிற்பகல் 1 மணி
வேட்பு மனுக்கள் திரும்பப் பெறுவதற்கான கடைசி நாளும் நேரமும்	12—3—84 நண்பகல் 12 மணி
தேவை ஏற்படின் வாக்குப் பதிவு நடைபெறும் நாளும், நேரமும்	பின்னர் அறிவிக்கப்படும்

வேட்புத் தாளை செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

(3) ஆளுநரிடமிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஆளுநர் அவர்கள் கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளை ஆய்விற்கு எடுத்துக்கொள்வதற்கு தனது இசைவைத் தெரிவித்துள்ளார்கள் :—

1. 1984 ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு.

2. தமிழ் நாடு 1984 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு.

(4) பேரவையிலிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளின் பிரதிகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன் :

1. தமிழ் நாடு 1984 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள், தமிழ் நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தம்-சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1984)